KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

## மக்கள் தொகை கணக்கெடுப்பு

# முதன்மைப் பயிற்றுநர்களுக்கு பயிற்சி முகாம்

**சென்னை, மே 11:** மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027-இன் தயாரிப்புப் பணிகளின் ஒரு பகுதியாக, முதன்மைப் பயிற்றுநர்களுக்கான 4 நாள்கள் பயிற்சி முகாம் சென்னையில் உள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் தொடங்கியது.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் முதல்கட்டமாக வீடுகளைப் பட்டியலிடுதல், வீட்டுவசதி கணக்கெடுப்பு ஆகியவற்றிற்கு தமிழகத்தில் நிகழாண்டு ஆக. 1 முதல் 30 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான தயாரிப்புப் பணிகளின் ஒரு பகுதியாக, முதன்மைப் பயிற்றுநர்களுக்கான 4 நாள்கள் பயிற்சி முகாம், சென்னையில் உள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில், மே 11 முதல் 14 ஒரு கட்டமாகவும், பின்னர் மே 18 முதல் 21 வரை அடுத்த கட்டமாகவும் நடத்தப்படுகிறது.

அதன்படி, தமிழக முழுவதும் உள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 73 முதன்மைப் பயிற்றுநர்களின் பங்கேற்புடன், பயிற்சி முகாம் திங்கள்கிழமை (மே 11) தொடங்கின.

சென்னை மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு தனியாக மே 18 முதல் 21 வரை இந்தப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இந்த முகாம் தொடக்க நிகழ்வில் தமிழக மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணிகளின் இயக்குநர் சுந்தரேஷ் பாபு பங்கேற்று 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு குறித்த கண்ணோட்டத்தை விவரித்தார்.

குடிமக்களே நேரடியாக இணையவழியில் தரவுகளைச் சமர்ப்பிக்க அனுமதிக்கும் சுய-கணக்களித்தல் மற்றும் தனித்த கைப்பேசி செயலி மூலம் தரவுகள் சேகரிக்கப்படுதல் ஆகிய இரண்டு முக்கிய அம்சங்கள், எண்ம மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து அவர் எடுத்துரைத்தார்.

தமிழக அரசின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மாநில ஒருங்கிணைப்பு அதிகாரி பி.அமுதா, வெற்றிகரமான மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி, உயர்தரத் தரவுகள் சேகரிப்பு குறித்து விவரித்தார்.

தமிழக அரசின் திட்டம், மேம்பாடு சிறப்புத் திட்டங்கள் துறையின் செயலாளர் சஜ்ஜன்சிங் ஆர். சவான், 'இந்த கணக்கெடுப்புக்கு முன்னதாக, வரும் ஜூலை 17 முதல் 15 நாள்களுக்கு மக்கள் சுயமாகக் கணக்களித்தல் நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்பதை ஊக்குவிக்க விளம்பரம் மேற்கொள்ளப்பட வேண்டும். தரவுகள் ரகசியம் காக்கப்படுவது இன்றியமையாதவை' என்றார்.

# பெண்ணுக்கு ரோபோடிக் நுட்பத்தில் இருவேறு புற்றுக் கட்டிகள் அகற்றம்

**சென்னை, மே 11:** ஒரே நேரத்தில் ரோபோடிக் அறுவை சிகிச்சை மூலம் பெண்ணில் உடலில் உருவான இருவேறு புற்றுநோய்க் கட்டிகளை சென்னை ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவமனையின் செயல் இயக்குநர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் கூறியதாவது:

வலது பக்க மார்பகத்தில் உருவான கட்டிக்கு சிகிச்சை பெற 58 வயது பெண் ஒருவர் காவேரி மருத்துவமனைக்கு வந்தார். பரிசோதனையில் அவருக்கு மார்பகப் புற்றுநோய்க் கட்டி இருந்தது தெரிய வந்தது.

உடலின் வேறு பகுதிகளுக்கு புற்று செல்கள் பரவியுள்ளனவா என்பதை அறிய பெட் ஸ்கேன் செய்யப்பட்டது. அதில், தைராய்டு சுரப்பியிலும் ஆரம்பநிலையில் புற்றுநோய்க் கட்டி அவருக்கு உருவாகியிருந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து மருத்துவமனையின் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சுஜய் சுசிகர் தலைமையிலான குழுவினர் டாவின்சி நுட்பத்திலான நவீன ரோபோடிக் முறையில் அறுவை சிகிச்சை செய்தனர்.

அதன்படி, இருவேறு இடங்களில் சிறு துளையிட்டு மிகத் துல்லியமாக புற்றுநோய்க் கட்டிகள் அகற்றப்பட்டன. இதன் மூலம் அந்தப் பெண் நலம் பெற்றார் என்றார்.

# உலகின் எந்த சக்திக்கும் இந்தியா தலைவணங்காது

## பிரதமர் மோடி உறுதி

**சோம்நாத், மே 11:** உலகின் எந்த சக்தியாலும் இந்தியாவை தலைவணங்க வைக்கவோ அல்லது நெருக்கடி தந்து பணிய வைக்கவோ முடியாது என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதிபடத் தெரிவித்தார்.

குஜராத் மாநிலத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற சோம்நாத் கோயில் கடந்த 1951-ஆம் ஆண்டு மே 11-ஆம் தேதி புனரமைக்கப்பட்டு மீண்டும் வழிபாட்டுக்கு நாட்டின் முதல் குடியரசுத் தலைவரான ராஜேந்திர பிரசாதால் திறக்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆகிறது. இது சோம்நாத் அம்ருத் மகோத்ஸவமாக கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி சோம்நாத் கோயிலுக்கு பிரதமர் மோடி திங்கள்கிழமை வந்தார். கோயிலில் அவர் மகா பூஜை நடத்தியதுடன், ஜல அபிஷேகம் செய்து, பிரார்த்தனை செய்தார்.

பின்னர், சோம்நாத் கோயில் பகுதியில் விமானப் படை விமானங்கள் நிகழ்த்திய கண்கவரும் சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்தார்.

முன்னதாக, ஹெலிகாப்டர் இறங்குதளத்தில் தொடங்கி, சோம்நாத் கோயில் வரை பிரதமர் மோடி சுமார் 1.5 கிலோ மீட்டர் தொலைவுக்கு வாகனத்தில் ஊர்வலமாக வந்தார். அப்போது சாலையின் இருபுறமும் திரண்டிருந்த மக்கள், அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அதேபோல் மேற்கு வங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்திருந்த நடனக் கலைஞர்கள் பாரம்பரிய நடனமாடி பிரதமரை வரவேற்றனர்.



இதையடுத்து, சத்பாவனா மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பிரதமர் மோடி பேசியதாவது:

1947-ஆம் ஆண்டில் நமது நாடு சுதந்திரம் அடைந்ததையடுத்து 1951-ஆம் ஆண்டில் சோம்நாத் கோயில் புனரமைக்கப்பட்டு பக்தர்களுக்காக திறக்கப்பட்டது.

சோம்நாத் கோயிலின் அம்ருத் மகோத்ஸவநிகழ்ச்சியானது கடந்த காலத்தை நினைவுகூரும் நிகழ்ச்சி மட்டுமல்ல. இது, அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியாவுக்கான உத்வேகத் திருவிழா ஆகும்.

**வாஜ்பாய்க்கு மோடி புகழாரம்:** மே மாதம் 11-ஆம் தேதி யன்று சோம்நாத் கோயில் மட்டும் சீரமைக்கப்பட்டு திறக்கப்படவில்லை. அதேநாளில்தான் 1998-ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான பாஜக அரசால் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தியது. இந்தச் சோதனைமூலம் நமது நாட்டின் திறன்களையும், ஆற்றல்களையும் ஒட்டுமொத்த உலகுக்கும் விஞ்ஞானிகள் வெளிகாட்டினர். இந்தியா நடத்திய அணுகுண்டு சோதனை, உலகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. பல நாடுகள் ஆத்திரத்தை வெளிப்படுத்தின. இதையடுத்து பொருளாதார நெருக்கடியாலும், பொருளாதார தடையாலும் இந்தியாவை தனிமைப்படுத்த உலகின் சக்திவாய்ந்த நாடுகள் முயற்சித்தன. இதுபோன்ற சூழ்நிலையில், வேறு எந்த நாடாக இருந்தாலும் பணிந்திருக்கும். உலகின் சக்திவாய்ந்த நாடுகளால் இதுபோல பிரம்மாண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது, அதிலிருந்து தப்பிக்க வழி கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும். ஆனால், இந்தியா உறுதியாக நின்றது. ஏனெனில் இந்தியா மற்ற நாடுகளைப் போல அல்லாமல் வித்தியாசமாக கட்டமைக்கப்பட்ட நாடாகும்.

இதன்பிறகும், சர்வதேச நாடுகளின் அழுத்தங்களைப் பொருட்படுத்தாமல், 1998 மே 13-ஆம் தேதி இந்தியா மேலும் இருமுறை அணுகுண்டு சோதனைகளை நடத்தியது.

இதன்மூலம் இந்தியா உண்மையில் எத்தகைய அரசியல் வல்லமை கொண்ட நாடு என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது. அந்த நேரத்தில் உலக நாடுகளிடம் இருந்து இந்தியாவுக்கு கடும் அழுத்தம் தரப்பட்டது. அப்போது ஆட்சியிலிருந்த வாஜ்பாய் தலைமையிலான பாஜக அரசு, நாடுதான் எங்களுக்கு முதன்மையானது என நிரூபித்தது. உலகின் எந்த சக்தியாலும் இந்தியாவை தலைவணங்க வைக்கவோ அல்லது நெருக்கடி தந்து பணிய வைக்கவோ முடியாது.

**நேரு மீது மோடி குற்றச்சாட்டு:** சோம்நாத் கோயிலை அழிக்க ஆக்கிரமிப்பாளர்கள் முயன்றனர். திரும்பத் திரும்ப அவர்கள் இடித்தனர். ஆனால் கோயிலும் திரும்பத் திரும்ப கட்டப்பட்டது. நாட்டின் முதல் மத்திய உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபபாய் படேலும், முதல் குடியரசுத் தலைவரான ராஜேந்திர பிரசாத்தும் சோம்நாத் கோயிலைப் புனரமைக்க அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். ஆனால், அதற்கு அப்போதைய பிரதமர் ஜவாஹர்லால் நேரு எதிர்ப்புத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சில சக்திகள், நாட்டின் சுய மரியாதையைவிட, குறிப்பிட்ட ஒரு தரப்பினரை திருப்திப்படுத்தும் அரசியலுக்கு தொடர்ந்து முக்கியத்துவம் தருகின்றன. உத்தர பிரதேச மாநிலம், அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டபோதும், இதே மனநிலையைத்தான் அந்த சக்திகள் வெளிப்படுத்தின. அத்தகைய சக்திகளிடம் நாம் விழிப்போடு இருக்க வேண்டும் என்றார்.

**நினைவு தபால் தலை வெளியீடு:** கூட்டத்தில் சோம்நாத் கோயில் சீரமைக்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆவதைக் குறிக்கும் வகையில் நினைவு தபால் தலையை பிரதமர் மோடி வெளியிட்டார்.

## தங்கம் வாங்குவதை ஒத்திவைக்க பிரதமர் மீண்டும் வலியுறுத்தல்

**வதோதரா, மே 11:** தற்போதைய உலகளாவிய சூழலை கருத்தில் கொண்டு, நாட்டு மக்கள் தங்கம் வாங்குவதை ஒத்திவைக்க வேண்டும் என்று பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் வதோதராவில் பாட்டீதார் சமூகத்தினர் கட்டிய சர்தார் தாம் விடுதியை திறந்துவைத்து பிரதமர் மோடி திங்கள்கிழமை பேசியதாவது:

இந்த தசாப்தத்தில் மேற்காசிய போரால் ஏற்பட்டுள்ள நெருக்கடிதான் மோசமான நெருக்கடிகளில் ஒன்றாகும். கரோனா நோய்த்தொற்றை கடந்து வந்தது போல இந்த நெருக்கடியையும் இந்தியா கடந்து வரும்.

அதேவேளையில், இந்தியா போரை சந்திக்கும்போதும் அல்லது வேறு எந்த முக்கிய பிரச்னையின்போதும் அரசு விடுக்கும் கோரிக்கையை ஏற்று, நாட்டு மக்கள் தங்கள் கடமைகளை சரிவர நிறைவேற்றியுள்ளனர். அதை தற்போது மீண்டும் செய்ய வேண்டியுள்ளது.

பெட்ரோல், டீசல் பிரித்தெடுக்கப்படும் கச்சா எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட பெட்ரோலியம் எரிவாயுவுக்கு (எல்பிஜி) மேற்காசியாவை இந்தியா பெரிதும் நம்பியுள்ளது. இதற்கு செலவிடப்படும் அந்நிய செலாவணியை குறைக்க அவற்றின் இறக்குமதியை குறைத்தாக வேண்டும்.

எனவே அந்நிய செலாவணியை சேமிக்கும் நோக்கில், பெட்ரோல்-டீசல் பயன்பாட்டை குறைக்க வேண்டும். அதற்காக மாறாக மின்சார வாகனத்தையும், பொதுப் போக்குவரத்தையும் மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும்.

தங்கத்தை இறக்குமதி செய்ய குறிப்பிடத்தக்க அளவில் அந்நிய செலாவணி செலவிடப்படுகிறது. தற்போதைய உலகளாவிய சூழலை கருத்தில் கொண்டு, நாட்டு மக்கள் தங்கம் வாங்குவதை ஒத்திவைக்க வேண்டும். இதேபோல வெளிநாடுகளுக்குச் சென்று திருமணம் செய்வதை தவிர்க்க வேண்டும், பள்ளி மாணவர்களுக்குத் தற்காலிகமாக இணையவழியில் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும், சமையல் எண்ணெய் பயன்பாட்டை குறைக்க வேண்டும், வெளிநாட்டுப் பயணங்களைக் குறைக்க வேண்டும், வீட்டில் இருந்து வேலை பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தக் கோரிக்கைகளை பிரதமர் மோடி முன்வைத்த நிலையில், அதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

இந்நிலையில், அந்தக் கோரிக்கைகளை அவர் மீண்டும் முன்வைத்துள்ளார்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# எரிபொருள் விநியோகம் பாதிக்காமல் இருக்க இந்தியா உறுதியான நடவடிக்கை

## மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்



புது தில்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற மத்திய அமைச்சர்கள்.

புது தில்லி, மே 11: மேற்காசிய போரால் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்படாமல் இருக்க இந்தியா உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா-இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதற்கு பதிலடியாக ஈரான் துறைமுகங்களை அமெரிக்க கடற்படை கப்பல்கள் சுமார் ஒரு மாதமாக முற்றுகையிட்டுள்ளன. இதனால் ஹோர்முஸ் நீரிணை வழியே செல்லும் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இரு தரப்புக்கும் இடையே எந்நேரமும் மீண்டும் சண்டை மூளலாம் என எதிர்பார்க்கப்படுவதால், மேற்காசியாவில் பெரும் போர் பதற்றம் நிலவுகிறது.

இந்நிலையில், மேற்காசிய நிலவரத்தைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட மத்திய அமைச்சர்கள் குழுக் கூட்டம் புது தில்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில், மத்திய அமைச்சர்கள் ஜெ.பி. நட்டா, ஹர்தீப் சிங் புரி, அஸ்வினி வைஷ்ணவ், ராம் மோகன் நாயுடு, சர்வானந்த சோனோவால் மற்றும் மூத்த அமைச்சக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:

மேற்காசிய போரை சுட்டிக்காட்டி, பெட்ரோல், டீசல், சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறைக்கும்படி, நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆதலால் பிரதமரின் வேண்டுகோளை செயல்படுத்தும் வகையில், பெட்ரோலிய பொருள்களின் பயன்பாட்டை குறைக்க அதிகாரிகள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெட்ரோலிய பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும், விநியோகம் பாதிக்கப்படாமல் இருக்கவும் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. ஆதலால் பொதுமக்கள் அதுகுறித்து அச்சம் கொள்ளாமல் அமைதி காக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த காலகட்டத்தில், எரிசக்தி சீராக கிடைக்கவும், பொருளாதாரத்தை ஸ்திரமாக வைத்திருக்கவும், கடற்போக்குவரத்து பாதுகாப்பாகவும் இருக்கவும் முன்னுரிமை கொடுத்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று ராஜ்நாத் சிங் கூறினார்.

60 நாள்களுக்குத் தேவையான கச்சா எண்ணெய் கையிருப்பு: ஆலோசனை கூட்டத்தில், நாட்டில் பெட்ரோலியப் பொருள்களுக்கு எந்த தட்டுப்பாடும் நிலவவில்லை என்றும், 60 நாள்களுக்குத் தேவையான கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கையிருப்பு உள்ளது, மேலும் 45 நாள்களுக்குத் தேவையான எல்பிஜி எரிவாயு இருப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், உலகிலேயே இந்தியா தான் கச்சா எண்ணெய்யை அதிகம் சுத்திகரிக்கும் 3-ஆவது பெரிய நாடு, பெட்ரோலிய பொருள்களை அதிகம் ஏற்றுமதி செய்யும் 4-ஆவது நாடு, 150 நாடுகளுக்கும் மேல் இந்தியா கச்சா எண்ணெய்யை ஏற்றுமதி செய்கிறது என்றும், உள்நாட்டு தேவையை முழுவதும் பூர்த்தி செய்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரத்தில், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை பலமடங்கு அதிகரித்து இருப்பதால், அதற்காக நாடு அதிகம் செலவிடுகிறது என்றும் குறிப்பிடப்பட்டது.

# பொக்ரான் அணுகுண்டு சோதனை இந்தியாவின் அறிவியல் முன்னேற்றத்துக்கு எடுத்துக்காட்டு

**புது தில்லி, மே 11:** பொக்ரான் அணுகுண்டு சோதனை நமது நாட்டின் அறிவியல் முன்னேற்றத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டு என பிரதமர் நரேந்திர மோடி திங்கள்கிழமை தெரிவித்தார்.



1998-ஆம் ஆண்டு மே 11-ஆம் தேதி பொக்ரான் அணுகுண்டு சோதனையை இந்தியா வெற்றிகரமாக மேற்கொண்டது. அன்றைய தினம் தேசிய தொழில்நுட்ப தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டுவரும் நிலையில் அவர் வாழ்த்து தெரிவித்தார்.

இதுகுறித்து பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'நாட்டு மக்களுக்கு தேசிய தொழில்நுட்ப தினத்தில் வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன். பொக்ரான் அணுகுண்டு சோதனையின் வெற்றி தினத்தில் நமது விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை நாம் பெருமையாக நினைவுகூர்வோம்.

பல்வேறு துறைகளில் புத்தாக்க வளர்ச்சியை அதிகரித்து, வாய்ப்புகளை நீட்டித்து தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில் தொழில்நுட்பத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

தேச முன்னேற்றம் மற்றும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மூலம் தீர்வுகளைக் கண்டறிவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். தேசத்தின் பெருமை மற்றும் சுய மரியாதையின் உண்மையான சிற்பிகளாக நமது விஞ்ஞானிகள் திகழ்கின்றனர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.